## குடும்ப அட்டை தொடர்பான தகவல் பெறும் உரிமைச் சட்ட விண்ணப்பம்

அனுப்புநர் நாள் :

பெறுநர்

அய்யா,

பொருள் : தகவல் பெறும் உரிமைச்சட்டம் 2005, பரிவு 6 - குடும்ப அட்டை தொடர்பான தகவல்கள் தொடர்பாக.

பார்வை : குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்த எனது மனு நாள்:

1) -------------- முதல் ----------------- வரை மொத்தம் எத்தனை பேர் குடும்ப அட்டை வேண்டி தங்கள் அலுவலகத்தில் விண்ணப்பித்துள்ளனர் ?

அ) அவர்களில் எத்தனை பேருக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது ?

ஆ) எத்தனை பேருக்கு வழங்கப்படவில்லை ?

இ) நான் விண்ணப்பித்த நாளுக்கு பிறகு விண்ணப்பித்தவர்களில் எத்தனை பேருக்கு குடும்ப அட்டை வழங்கப்பட்டது ?

ஈ) மேற் குறிப்பிட்ட காலத்தில் குடும்ப அட்டை வழங்கப்பட்ட கோப்புகளை பார்வையிட எனக்கு நேரம், நாள் ஒதுக்கி அனுமதி தர வேண்டுகிறேன்.

2) ஒருவர் குடும்ப அட்டை வேண்டி விண்ணப்பித்து எத்தனை நாட்களில் அவருக்கு குடும்ப அட்டை வழங்கப்பட வேண்டும் ?

3) நான் குடும்ப அட்டைக்கு விண்ணப்பித்த மனு தங்கள் அலுவலக பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டதா ?

அ) ஆம் எனில் பதிவு எண் என்ன ?

ஆ) பதிவேட்டின் பக்க எண் என்ன ?

இ) யாரால் பதிவு செய்யப் பட்டது ?

ஈ) அந்த பதிவேடு அலுவலக அதிகாரியால் மீள்பார்வை (Review) செய்யப்பட்டதா ?

4) எனது குடும்ப அட்டைக்காக கொடுக்கப்பட்ட மனுவின் மீது நடவடிக்கை எடுக்கப் பட்டதா ?

அ) ஆம் எனில், ஆய்வு செய்த நாள், அவரின் பெயர், ஆய்வு முடிவு - நகல் தரவும்.

ஆ) இல்லை எனில் அதற்கான காரணம் தெரிவிக்கவும்.

6) குடும்ப அட்டை வேண்டி மனு செய்ய என்னென்ன இணைக்கப் படவேண்டும் ?

அ) எனது மனுவில் இணைப்புகள் முழுமையாக, முறையாக இருக்கிறதா ?

ஆ) இல்லை எனில், எனக்கு தகவல் ஏதேனும் தெரிவிக்கப்பட்டதா ? அதன் நகல் தரவும்.

இ) அம் மனு இப்போது யாரிடம் என்ன நிலையில் இருக்கிறது ?

7) தங்கள் அலுவலகத்தில் அரசு ஆணை எண் : 114/2006 (P&AR) பின்பற்றப் படுகிறதா ?

அ) ஆம் எனில் இதுவரை எனக்கு ஏதாவது கடிதம் அனுப்பப்பட்டுள்ளதா ?

ஆ) அனுப்பியிருந்தால் அதன் நகல் ஒன்று வழங்கவும்

இ) இல்லை எனில், காரணம் தெரிவிக்கவும்.

மேற்கண்ட தகவல்களைப் பெறுவதற்காக ரூ.10- க்கு நீதிமன்ற வில்லை ஒட்டியுள்ளேன்.

இப்படிக்கு,

இணைப்பு : பார்வையில் குறிப்பிட்டுள்ள நகல்.

( கையொப்பம் )